PUMP
with
Standard Accessories
Select

NEWTONE
Water Pumps

# உதயன்

விலை ரூ. 2/-

தரமான
உதிரிப்பாகங்களைக்
கொண்டு தயாரிக்கப்படும்

நீயூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

சுடர்: 4 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு கார்த்திகை மீ 25 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. ஆகிர் பிறை 29 ( 10 - 12 - 1988 ) UTHAYAN - A lively Tamil Daily கதிர்: 13

# சிங்களத்துடன் தமிழும்
# அரச கரும மொழியானது

## இதற்கான அரசமைப்புச் சட்டத்திருத்தம் நேற்று 123 வாக்குகளினுல் நிறைவேறியது

கொழும்பு, டிசம்பர் 10

சிங்களத்துடன் சேர்த்து தமிழையும் அரச கரும மொழியாக்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தம் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

சட்டத்துக்கு ஆதரவாக 123 எம். பிக்கள் வாக்களித்தனர்.

மொழிப் பிரயோகம் தொடர்பான - அரசமைப்பின் நான்காவது அத்தியாயத்தின் 18 ஆவது ஷரத்தே - நேற்று நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது.

இது அரசமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 16 ஆவது திருத்தமாகும்.

உள் நாட்டலுவல்கள் அமைச்சர் கே.டபிள்யூ தேவநாயகம் சட்டமூலத்தைச் சமர்ப்பித்துப் பேசினுர்.

நாட்டைப் பிடித்திருந்த 30 ஆண்டு காலப் பிரச்சினை தீர்ந்தது என்று அமைச்சர் தேவநாயகம் சொன்னுர்,

பயங்கரவாதத்தை நாட்டில் ஏற்படுத்தியதே இந்த மொழிப் பிரச்சினை தான் என்றும் அவர் சொன்னுர்.

கலவான எம் பி. டியூ குணசேகரா பேசுகையில், 'மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய ஒன்று என காலங் கடந்தாவது எல்லா அரசியல் கட்சிகளும் உணர்ந்து விட்டன என்று சொன்னுர்.

கம்பஹா எம்.பி. திரு, எஸ். டி. பண்டாரநாயக்காவும் பேசினுர். (உ-எ)

### தொடர்ந்து பஸ் சேவை

யாழ்ப்பாணம் டிச 10

யாழ். கொழும்பு பஸ் சேவைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

சிங்களப் பகுதிகளில் யாழ் பஸ் பயணிகள் சில நெருக்கடிகளுக்கு ஆளாகின்ற போதிலும் சேவைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (உ-10)

### முச்சந்தி முரளி



உவர் உத்தமர், தான் விட்ட பிழையைத் திருத்திறத்துக்குழுப்பது வருஷம் எடுத்திது பாருங்கோ...!

## ரஷ்ய பூமியதிர்ச்சியில் பலியானோர் 1 லட்சம் பேர்!

மாஸ்கோ, டிச 10

சோவியத் மாநிலமான ஆர்மேனியாவில் சடந்த புதன்கிழமை இரவு ஏற்பட்ட மிகப்பெரிய பூமியதிர்ச்சியில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஒரு லட்சத்தை மிஞ்சி விட்டதாக தற்போது அறிவிக்கப்படுகிறது,

இதனிடையில் பாதிக்கப்பட்டவர்களுக்குநிவாரணம் வழங்கும் வேலைகள் சோவியத் ஜனுதிபதி கோர்பச்சேவ் தலைமையில் நடைபெறுகின்றன.

சோவியத் பிரதமர் ஆர்மேனியாவின் தலைநகரான யரவானில் முகாமிட்டிருந்து நிவாரணப்பணிகளை மேற்பார்வை செய்து வருகிறுர்.

உலகநாடுகள் குறிப்பாக அமெரிக்காவும் பிரிட்டனும் அவசர வைத்திய உதவிகளையும் மீட்புத் தொண்டர்களையும் விமானங்கள் மூலம் அனுப்பி வைத்தன.

இடிபாடுகளை அகற்ற கிரேன்களும் பெயர்ந்த மரங்களை வெட்டுவதற்கு உரிய ஆயுதங்களும்ஏராளமாக தேவைப்படுவதாக மாஸ்கோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று மட்டும் ஆயிரம் பேர் வரையில் இடிபாடுகளுக்குள் இருந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இன்னும் தொடர்கிறது

லண்டன் டிச 10

ஆர்மேனியாவில் மீண்டும் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை இரவு ஏற்பட்ட பிரமாண்டமான பூமி அதிர்ச்சிக்குப் பின்னர் இது வரை 21 நிலநடுக்கம் ஏற்பட்டதாக ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## இன்றுமுதல் 20ஆம் திகதிவரை
## அரச அலுவலகங்களை மூடுமாறு எச்சரிக்கை

தென்பகுதி தீவிரவாதிகள் விடுத்துள்ளனர்

கொழும்பு டிச 10

இன்று முதல் எதிர் வரும் இருபதாம் திகதி வரை தென் பகுதியில் வங்கிகள், அரசாங்கத் திணைக்களங்கள் எதுவும் இயங்கக் கூடாதென்று தென் பகுதித் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்திருப்பதாகக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சுடிதங்கள், தொலைபேசி அழைப்புகள் உட்பட பல்வேறு வழிகளில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-ஐ)

## வாக்குச் சீட்டுகள் ஸ்ரீலங்கா முகாம்களில்?

வவுனியா, டிச 10

ஜனுதிபதித் தேர்தலுக்குரிய வாக்குச் சீட்டுகள் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டு பாதுகாப்பாக ஸ்ரீலங்கா படை முகாம்களில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

எனினும் இது குறித்து தங்களுக்கு எதுவுமே தெரியாதென்று அரசாங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றுர்கள்.

வவுனியா கச்சேரியின் தேர்தல், காணி அலுவலகங்கள் தொடர்ச்சியாக பூட்டப்பட்டு இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது: (ஓ-164)

## கலை, விஞ்ஞான பீட விரிவுரைகள் நேற்றும் இல்லை

யாழ் பல்கலைக் கழக கலைப்பீட, விஞ்ஞான பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் நேற்றும் இரண்டாம் நாளாக நடைபெறவில்லை.

கடந்த புதன்கிழமை மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கைத் தொடர்ந்து பல்கலைக் கழக ஊழியர்களும் உத்தியோகத்தர்களும் தமது கடமைகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர். (உ-ஓ-5)

## சட்டத் திருத்தம் குறித்து சட்டமா அதிபர் விளக்கம்

கொழும்பு, டிச 10

தமிழ் மொழியை அரச கரும மொழியாக்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தம் குறித்து சட்டமா அதிபர் திரு சுனில் டி சில்வா உயர் நீதி மன்றத்தில் நேற்று முன்தினம் விளக்கமளித்தார்.

இந்த அரசமைப்புத் திருத்தம் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் எச். ஏ ஜி டி சில்வா, ஜி.பி எஸ். டி சில்வா எம். ஜமீல் ஆகியோர் முன்னிலையில் பரிசீலனைக்கு வந்தது.

நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் கூறியதாவது.-

இலங்கையின் அரச கரும மொழிகளாக சிங்களமும் தமிழும் இருக்கும் என்றும் ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கும் என்றும் 16 ஆவது திருத்தம் கூறுகிறது

புதிய மொழிக் கொள்கை ஒன்றைக் கொண்டு வருவதற்காக அரசமைப்புச் சட்டத்தின் 18 ஆவது ஷரத்து திருத்தப்பட வேண்டும். இதற்காக அரசமைப்புக்கு 16 ஆவது திருத்தம் கொண்டு வரப்படுகின்றது.

இம்மாற்றத்துக் காக அரசமைப்பின் அத்தியாயம் 4 மீண்டும் எழுதப்படவேண்டியுள்ளது.

பாடசாலைகளில் சிங்களமும் தமிழும் போதனு மொழிகள் என்ற அடிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அவர் கேட்ட கேள்வி!

கொழும்பு, டிச. 10

அங்கொடை ஆஸ்பத்திரியில் இருந்து தப்பிச் சென்றவர்களில் சிலர் மீண்டும் திரும்பியுள்ளனர்.

இதை அறிந்த செய்தியாளர்கள் அங்கு விரைந்தனர்.

மனநோயாளி ஒருவரிடம் செய்தியாளர் தமது வழமையான பாணியில் கேட்டார் ஒரு கேள்வியை.

'தப்பி வெளியே சென்றது பற்றி என்ன நினைக்கிறீர்?'

மனநோயாளி சொன்னுர் இப்படி—

''உங்களுக்கு என்ன பைத்தியமா? இது தான் எங்கள் வீடு. இதை விட்டுவிட்டு நாம் எங்கு போவோம்?''

செய்தியாளரின் முகத்தில் அசடு வழிந்தது.

இதனிடையில் அங்கொடை மனநோயாளர் ஆஸ்பத்திரியில் தங்கியுள்ள நோயாளர்களைக் சணக்கெடுக்கும் வேலை கடந்த வியா

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஏழு பிள்ளைகளுடன் கிணற்றில் பாய்ந்த தாய்!

### செட்டிகுளத்தில் சம்பவம்

வவுனியா, டிச 10

பதினெரு பிள்ளைகளின் தாய் ஒருவர் தமது ஏழு பிள்ளைகளுடன் நஞ்சு அருந்தி அவர்களையும் சேர்த்துக் கொண்டு கிணற்றுக்குள் விழுந்து தற்கொலை செய்து கொண்டார். இந்தச் சம்பவம் செட்டிகுளத்தில் இடம் பெற்றுள்ளது.

இறந்த பிள்ளைகளுள் 18 வயது 16 வயதுடைய இளம் பெண்களும் அடங்குகின்றனர்.

விதவைத் தாயான இறந்தவர் தனது பிள்ளைகளுடன் கௌரவமாகவும் வசதியுடனும் வாழமுடியவில்லையே என்ற காரணத்தினுல் இவ்வாறு தற்கொலை புரிந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

அனைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனுதிபதி முன்னிலையில்
## வரதராஜப்பெருமாள் தமிழில் சத்தியப் பிரமாணம்

கொழும்பு, டிச 10

வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சராக திரு. வரதராஜப் பெருமாள்நேற்றுதமிழில் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்ருர்.

ஜனுதிபதி ஜெயவர்த்தன நேற்றுக் காலை அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

ஜனுதிபதி மாளிகையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் ஜனுதிபதியின்செயலாளர் மெனிக்திவல மாகாண சபை அமைச்சச் செயலாளர் திஸ்ஸ ஜெயக்கொடி ஆகியோருடன் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கப் பிரமுகர் திரு. கிருபாகரன், நவசம சமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் சலந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபை உறுப்பினர் சுட்டுக்கொலை

கொழும்பு, டிச. 10

மேற்கு மாகாணசபையின் உறுப்பினர் ஒருவரும் அவரின் ஆதரவாளர்கள் இருவரும் நேற்று தீவிரவாத சந்தேகநபர்களினுல் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்ட உறுப்பினர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர். (ஓ எ)

## யாழ். நகரில் நேற்று 2 இளைஞர்கள் சூட்டுக்கு பலி

யாழ்ப்பாணம், டிச 10

யாழ் நகரில் நேற்று நண்பகல் பதினெருமணி அளவில் இரண்டு இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானுர்கள்.

யாழ் நகரில் கே. கே. எஸ். வீதியிலும், மானிப்பாய் வீதியிலும் இச் சம்பவங்கள் இடம்பெற்றன.

சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தவர்களில் ஒருவரின் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

வேறு சில இளைஞர்கள் இப் பகுதியில் கைது செய்யப்பட்டதாகவும் அறியவருகிறது. (உ-10)

### சுப நேரம்

10-12-1988
கார்த்திகை 25
சனிக்கிழமை

சுப நேரம்:
3 19 முதல் 4 49 வரை
ராகு காலம்:
9 19 முதல் 10.49 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## மறுவாழ்வுப் பணிக்கே மாகாண அரசு முன்னுரிமை

பதவியேற்ற பின் முதல்வர் பேட்டி

கொழும்பு, டிச 10

வன்செயல்களினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணிகளுக்கே எனது அரசு உயர் முன்னுரிமை வழங்கும். அதற்காக நிபுணர் கமிட்டி ஒன்று அமைக்கப்படும்.

வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு அ. வரதராஜப் பெருமாள் முன்கண்டவாறு தெரிவித்தார்

முதலமைச்சராகப் பதவியேற்ற பின்னர் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் திரு வரதராஜப்பெருமாள் இத்தக

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இன்று உதயனே!

பத்திரிகைத் தாளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக இன்று சனிக்கிழமை வார இதழ் சஞ்சீவியை வெளியிட முடியவில்லை என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்ருேம்.

உங்கள் அபிமானத்துக்குரிய சஞ்சீவியை அடுத்த வாரமேனும் வெளியிட எமது சக்திகள் அனைத்தையும் சேர்த்து முயற்சிப்போம்.

—நிர்வாகிகள்

### மனித உரிமைகள் தினம் இன்று

யாழ்ப்பாணம், டிச. 10

இன்று உலகின் பல நாடுகளிலும் ஐ நா. மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகிறது.

1948 டிசம்பர் பத்தாம் திகதி மனித உரிமைகள் சாசனம் பிரகடனம் செய்யப்பட்டது.

ஐ. நா. மனித உரிமைகள் பிரகடனத்தின் நாற்பதாவது ஆண்டு இந்த வருடத்தில் பரந்த அளவில் கொண்டாடப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜனுதிபதித் தேர்தல்:
## முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு இன்று தெரியும்

கொழும்பு, டிச. 10

ஜனுதிபதித் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் எந்தக் கட்சியை ஆதரிக்கும் என்பது குறித்து இன்று கொழும்பில் நடைபெறும் அக்கட்சியின் மாநாட்டில் அறிவிக்கப்படும்,

இன்று கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் முஸ்லிம் காங்கிரஸின் 8 ஆவது மாநாடு நடைபெறவுள்ளது.

★ பிரதமர் பிரேமதாஸாவுக்கு வாக்களிப்பது அல்லது,

★ வாக்களிக்காமல் இருப்பது அல்லது,

★ வாக்கைப் பழுதாக்குவது

—மேற்கண்ட மூன்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

### 17 ஆம் திகதி சபை கூடும்

கொழும்பு, டிச. 10

நாடாளுமன்றம் இம் மாதம் 17 ஆம் திகதி சனிக்கிழமை மீண்டும் கூடும். (உ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

சுத்த இன சணன் கொம்பு ஊற்ற மறி ஆடு 3 மாத சிறையுடன் உடன் விற்பனைக்கு உண்டு. மகேன் மாஸ்ரர், அரசடி நவாலி தெற்கு, மானிப்பாய். (8206)

பாவிக்கப்பட்ட ஹோல் செற். Show-cass, மேசை Baby cot, கட்டில் மெத்தை, கண்ணாடி மேசை, Rice - cooker, Multi-cooker, மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. திரு. பதிபாபரணம், இராமலிங்கம் வீதி திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி. (8092)

பூனுரி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில் K K S றோட்டிலிருந்து 20 யார் தூரத்தில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: M பரமேஸ்வரி (குயிலா) அளித்தாஸ் கூல் பூனுரி மரத்தடி, கொக்குவில். (8049

நல்ல பாவிப்பிலுள்ள English ஒற்றைக் கதவு பெரிய இரும்புப் பெட்டியும் திண்டுக்கல் ஒற்றைக் கதவு பேபிசைஸ் இரும்புப் பெட்டியும் உடன் விற்பனைக்குண்டு. யவுனு எலக்ரோ பிளேற்றேர்ஸ், No 7, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம். (8080)

5: K V. A C, 230 V டீசல் ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு. நா சிவபாலமூர்த்தி, பாதிரி கோவிலடி லேன், கே. கே. எஸ். றோட், கொக்குவில். (8·62)

**நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்**

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் அரசு அச்சகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம், (C/357)

**கலண்டர்கள் டயறிகள்**

மெய்கண்டான், லீலா, ஆனந்தா, லஷ்டலக்ஷ்மி, தாளயன், கலண்டர்கள், வாக்கிய, திருக்கணித பஞ்சாங்க கலண்டர்கள், மற்றும் Observer, Sivali உதயா லீலா, இன்னும் பல வகையான டயறிகள் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம் (8045)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Broiler குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Hyline கறுப்பு, வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்குப் படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்றர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7686)

**இறைச்சிக்கோழி விநியோகம்**

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7685)

**தேவை**

நடனம், வாய்ப்பாட்டு, வீணை, வயலின், புல்லாங்குழல் ஆகிய பாடங்கள் தரம் I இலிருந்து ஆசிரியர் தரம் வரை கற்பிப்பதற்கு தகைமையானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசித் திகதி:- 30 - 12 88 கலாலயா, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம் (C/886)

**மணமகன் தேவை**

லண்டனில் Accountancy படித்துக் கொண்டிருக்கும் 25 வயதுள்ள இந்து வேளாள குல மெல்லிய சிவந்த நிறமுள்ள அழகிய பெண்ணுக்கு 33 வயதிற்குட்பட்ட டாக்டர், பொறியியலாளர், கணக்காளர் அல்லது பகுதி படித்துள்ள கணக்காளர் தரத்திலுள்ள லண்டன் அல்லது கனடாவில் உள்ள மணமகன் தேவை விண்ணப்பிக்கவும் 400, C/o உதயன். (8034)

**தவறி விட்டது**

சிவ னந்தம் நிரஞ்சனும்பிகை ஆகிய அடையாள அட்டை தவறி விட்டது. கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன் (8207)

**நிர்வாகத் தெரிவு**

தம்பாட்டி கடல் தொழிலாளர் நலன்புரிச் சங்கம் புதிய நிர்வாகத் தேர்வு தலைவர் திரு ஐ சிவநேசபிள்ளை, செயலாளர் க ஜெயகுமார், பொருளாளர் மா கணேசபிள்ளை, உப-தலைவர் திரு சு. செல்வரெட்னம். உப-செயலாளர் செ விஜயகுமார் மற்றும் உறுப்பினர்கள்; த தவராசா, க. ராசன் வி. குமார், து இரட்ணகுமார் க சிவபாலன், வீ. பொன்னுத்துரை. கணக்காளர்கள்: யா பரமேஸ்வரன், ச. தவபாலன் (8203)

**கல்வி**

G C E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை புதிய பழைய திட்டத்திற்கமைய 21 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் 2 மாதத்திற்குள் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு வீடுகளில் சென்று கற்பிக்கப்படும். எனது வீட்டிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆறுமுகநாதன், 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. 8040)

**Advanced English**

புதிய பிரிவு ஆரம்பம் 11-12 88. சனி ஞாயிறு நாட்களில். நேரம் 2 மணி 4 மணி S B Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (7787)

**வகுப்புகள்**

1989 கல்வி ஆண்டிற்கான புதிய வகுப்புகள் ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் ஆரம்பமாகியுள்ளன. ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான புதிய பிரிவு ஆரம்பமாகியுள்ளன ஆண்டு 3, 4 5, ற்கு தமிழ், கணிதம், ஆங்கிலம் சிறந்த முறையில் கற்பிக்கப்படுகிறது புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். (8205)

அண்டு 1க்கான கணித விஞ்ஞான ஆங்கில வகுப்புகள் ஆரம்பமாகின்றன. 29. கச்சேரி நல்லூர், யாழ்ப்பாணம். (8083)

கேக், ஐசிங், ஜெனரல் குக்கரி வகுப்புக்கள் பிரத்தியேகமான செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும் வெளிநாடு செல்வோர்க்கும் இலத்தரசிகளுக்கும் சிறந்த ஒரு வரப்பிரசாதம் காலம்: 2 மாதம் ஆரம்பம்: 14 12-1988. தொடர்பு: Arullananda 11/2, வைமன் வீதி நல்லூர் (C 838)

தரம் 1 தொடக்கம் ஆசிரியர் தரம் வரையிலான வகுப்புக்களுடன் வருடந்தோறும் வட இலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப்படும் மிருதங்க பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஏற்றவகையில் பயிற்றுவிக்கப்படும். வகுப்புகள் சனி ஞாயிறு பி ப. 2.00 மணிக்கு நடைபெறும். கலாலயா பதிவு செய்யப்பட்டது) விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம். (C/887)

## மீளக் குடியமர்தல் நிவாரணம்:

# 4,427 குடும்பங்களின் பட்டியல் நேற்றுமுன்தினம் வெளியானது!

யாழ்ப்பாணம் டிச 10

மீளக் குடியமர்தல் நிவாரணமாக ஆயிரம் ரூபாவைப் பெறும் மேலும் 4 ஆயிரத்து 427 குடும்பங்களின் பெயர்ப் பட்டியல்கள் கடந்த வியாழன்று சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன.

உதவி அரச அதிபர் பிரிவு கிராம சேவகர் பிரிவு ஆகியவற்றில் நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையும் பட்டியல்கள் அனுப்பப்பட்டுள்ள வங்கிகளின் விபரமும் வருமாறு:-

சாவகச்சேரி உ. அ. பிரிவு:-

(இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை) மீசாலை தெற்கு, சாவகச்சேரி கிழக்கு கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 334 குடும்பங்களும்.

சண்டிலிப்பாய் உ. அ. பிரிவு:-

(இலங்கை வங்கி மானிப்பாய்கிளை) நவாலி சண்டிலிப்பாய், ஆனைக்கோட்டை மாதகல், சுதுமலை, பண்டத்தரிப்பு கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 823 குடும்பங்கள்.

யாழ்ப்பாண உ. அ. பிரிவு:

(இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளை) கொட்டடி, பெரியகடை கொழும்புத்துறை கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 380 குடும்பங்கள்

தெல்லிப்பழை உ. அ. பிரிவு:-

(இலங்கை வங்கி, காங்கேசன்துறைக் கிளை) அளவெட்டி, பன்னாலை, தெல்லிப்பழை வடக்கு, தெல்லிப்பழை மேற்கு காங்கேசன்துறை தெற்கு, மயிலிட்டித்துறை கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 378 குடும்பங்கள்

கரவெட்டி உ அ அ பிரிவு:-

(மக்கள் வங்கி நெல்லியடிக் கிளை) கரவெட்டி மத்தி கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 127 குடும்பங்கள்.

பருத்தித்துறை உ அ. அ. பிரிவு:-

(இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை) தொண்டமனாறு வல்வெட்டித்துறை தெற்கு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்து 58 குடும்பங்கள்.

வேலணை உ. அ. அ. பிரிவு:-

(இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளை) மண்டைதீவு கிராம சேவையாளர் பிரிவில் 448 குடும்பங்கள்

ஊர்காவற்றுறை உ. அ அ பிரிவு:-

(மக்கள் வங்கி, ஊர்காவற்றுறைக் கிளை) காரைநகர் கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 13 குடும்பங்கள்.

உடுவில் உ. அ. அ. பிரிவு:-

(மக்கள் வங்கி சுன்னாகம் கிளை) தாவடி இணுவில், ஏழாலை வடக்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 87 குடும்பங்கள். (உ-5)

## அமைதியான முறையில்

# தேர்தலை நடத்த மேலும் 58,500 பொலீஸார் தேவை

### பிரதி பொலீஸ்மா அதிபர் அறிக்கை

கொழும்பு, டிச. 10

அமைதியான முறையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட இன்னமும் 58 ஆயிரத்து 500 பொலீஸார் தேவை.

ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான பொலீஸ் தலைமையகப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் லியோ பெரேரா பொலீஸ் மா அதிபருக்கு சமர்ப்பித்த அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் 26 ஆயிரத்து 500 பொலீஸார் பணிபுரிகின்றனர்.

அமைதியான தேர்தலை நடத்த மொத்தமாக 85 ஆயிரம் பொலிஸார் தேவைப்படுகின்றனர்.

தற்போதுள்ள பொலீஸாரின் எண்ணிக்கை 58, 500 வினால் அதிகரிக்கப்பட்டால் மட்டுமே அமைதியான தேர்தலை நடத்த முடியும்.

பிரதி பொலீஸ் மா அதிபரின் இந்த அறிக்கை தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

## விபுலானந்த இசை நடனக்கல்லூரி தராதரப் பத்திரம் நிராகரிப்பு

மட்டக்களப்பு டிச 10

அண்மையில் கல்விச் சேவை ஆணைக்குழுவினரால் நடத்தப்பட்ட இசை நடன ஆசிரியர்கள் நேர்முகப் பரீட்சையில் மட்டக்களப்பு விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியின் கல்வித் தராதரப் பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளது

மேற்படி கல்லூரியின் தாரதரப் பத்திரம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படாத காரணம் தெரிவிக்கப்பட்டு விண்ணப்பதாரிகள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்விடயம் குறித்து மட்டக்களப்பு பிரசைகள் குழு பிராந்திய அபிவிருத்தி அமைச்சுக்கு புகார் தெரிவிக்கும் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது (ச-21)

## ஜே ஆரின் இடத்துக்குப் பிரேமா:

# தலைவலி தீர தலையணை மாற்றும் கதை

### அனுரா சாடுகிறார்

கொழும்பு, டிசம்பர் 10

நாட்டின் ஜனாதிபதியாக ஜெயவர்த்தனா இருந்த இடத்துக்கு பிரேமதாஸவைத் தெரிவு செய்வது, தலைவலி தீர தலையணையை மாற்றும் கதையாகவே முடியும்.

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா ஹியாலையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில முன்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

ஜனாதிபதித் தேர்தலைக் குழப்ப சில சக்திகள் முயற்சிக்கின்றன. அப்படி நடந்தால் நாட்டின் ஆட்சிப்பொறுப்பை இராணுவம் பொறுப்பேற்கும்.

யு என். பி. கடலில் மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பல். அரசு எம் பிக்கள், அமைச்சர்கள் நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். ஒர் அரசு எம். பி துபாயில் இருந்து இராஜினாமாக் கடிதத்தை அனுப்பியிருக்கிறார்

இப்படி திரு அனுரா பண்டாரநாயக்கா சொன்னார். (ஒ-எ)

# கிளிநொச்சி மக்களின் குடி தண்ணீர் பிரச்சினை தீரும்

தாளையடி, டிச. 10

கிளிநொச்சி மக்களின் குடி தண்ணீர்ப் பிரச்சினை விரைவில் தீரவுள்ளது

கிளிநொச்சி நகரில் பல ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட பாரிய நீர்த் தாங்கியிலிருந்து, நீரை குழாய்கள் மூலம் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நீர்த்தாங்கியிலிருந்து நகரின் பல பகுதிகளுக்கு நீரை விநியோகிப்பதற்கு நிலத்திற்கடியில் குழாய்கள் அமைக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (ச-144)

# சுன்னாகத்துக்கு "ஹெவிடீசல்" வந்தது

யாழ்ப்பாணம் டிச 10

சுன்னாகம் மின்நிலையத்துக்கு ஒரு லட்சம் லீற்றர் "ஹெவிடீசல்" வியாழனன்று அவசரமாக ரயில் மூலம் கொண்டு வரப்பட்டது.

யாழ்பாணத்துக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதை அடுத்து சுன்னாகம் மின்நிலயத்தில் உள்ள ஜெனரேட்டர் மூலம் பகுதி பகுதியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பது தெரிந்ததே (ஓ-10

# தமிழ் மாகாணத்தின் தலைநகரம் எது?

கொழும்பு, டிச 10

இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்தின் தலைநகராக திருகோணமலை இருக்கவேண்டும் இப்படி ஈ பி ஆர். எல். எப் அரசு விருப்பம் தெரிவித்தது

இதுவே தமிழரின் அபிலாஷை என்றும் சுட்டிக்காட்டியது

ஆனால் இலங்கை அரசு அதை விரும்பவில்லை. திருகோணமலையை சிங்கள நகராக சிங்களவரும் கருதுகின்றனர் என்று இலங்கை அரசு தெரிவித்தது:

இறுதியில் இரு தரப்பினருக்கும் இடையே இணக்கமான நிலை ஒன்று உருவாக்கப்பட்டது

திருகோணமலை, இணைந்த மாகாணத்தின் "நிர்வாக மையம்" (Administrative Centre என்று கருதப்படும் என்பதே அந்த இணக்கம்.

— இப்படி 'இந்து. நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

# பிறமதங்களைத் தூஷிக்கும் பழக்கம் நாவலரிடம் இருக்கவில்லை

### கல்லூரி விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், டிச 10

"எமது நாடு ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த காலத்தில் சைவத்துக்கும் தமிழுக்கும் தனிக்குரல் கொடுத்தவர் நாவலர் இன்று அவரது திருவுருவச் சிலை கேட்பார் அற்ற நிலையில் வேறு இடத்துக்கு அகற்றப்பட்டுள்ளது இது தான் நாம் அவருக்கு அளித்த மரியாதை"

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இந்து இளைஞர் கழக ஆதரவில் நடைபெற்ற நாவலர் நினைவு தின விழாவில் உரையாற்றும் பொழுது திரு சிவ மகாலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர் வே சண்முகலிங்கம் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

திரு. மகாலிங்கம் தனது உரையில் மேலும் கூறியதாவது 'சைவமக்கள் பிற மதங்களின் ஊடுருவல்களால் பாதிக்கப்பட்டிருந்த காலத்தில் நாவலர் பெருமான் சைவ மக்களிடையே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். அவர் [illegible] பிற மதங்களைத் தூஷித்தது கிடையாது.

அக்காலச் சைவர்களிடையே காணப்பட்ட ஒழுக்கக் குறைவுகளை அவர் அம்பலப்படுத்தினார்"

இப்படி அவர் கூறினார்

திரு சண்முகலிங்கம் தனது தலைமை உரையில் "மாணவர்கள் தமிழைப் பிழை அற எழுதவும் பேசவும் கற்றுக் கொள்வதே நாம் அவருக்குச் செய்யும் பெருந்தொண்டு" எனச் சொன்னார்.

செல்வன் பா. அகிலன் நன்றியுரை வழங்கினார். (இ-ச)

## சிறிமாவோ வெளியிட்டது:

# 'பொன்னம்பலம் விஞ்ஞாபனம்' என காமினி கிண்டல்

ரோஸ்மீட் இல்லத்தில் வைத்து திருமதி சிறிமா தலைமையில் தயாரிக்கப்பட்டது 'பொன்னம்பலம் விஞ்ஞாபனம்' தான், சுதந்திரக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் அல்ல.

அமைச்சர் காமினி திஸநாயக்கா மாதம்பையில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

சுதந்திரக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிப்பில் கொழும்பு ஒரு வீதியில் உள்ள சட்டத்தரணி ஒருவர் முக்கிய பங்கெடுத்திருக்கிறார் அவர் தமிழ் இனத்தின் தலைவராக வர முயற்சிக்கிறார்.

இப்படி அவர் சொன்னார். (உ-எ)

### 11 பேர் சித்தி

அண்மையில் நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையிலிருந்து தோற்றிய 75 மாணவர்களில் 11 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். (ச)


மக்கள் தீர்ப்பின் மூலம் அமோக வெற்றியீட்டி வடக்கு கிழக்கு மாநில அரசைக் கைப்பற்றிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்

# மாபெரும் பொதுக்கூட்டம்

இடம்: யாழ். மத்திய கல்லூரி மைதானம்

காலம்: 11-12-1988 பிற்பகல் 2 மணி

தலைவர்: தோழர் கே. பிறேமச்சந்திரன் அவர்கள் யாழ். பிராந்தியப் பொறுப்பாளர்

பேச்சாளர்கள்:-

தோழர் கே. பத்மநாபா
செயலாளர் நாயகம்

தோழர் அ வரதராஜப் பெருமாள்
முதலமைச்சர்

தோழர் பெ. கிருபாகரன்
நிதியமைச்சர்

தோழர் அபூயூசுப்
போக்குவரத்து சிறுகைத்தொழில் அமைச்சர்

தோழர் கே. சுப்பையா
தோழர் கே. ரவீந்திரன்
மாநில சபை உறுப்பினர்

தோழர் ப. ஜீ பரத்தினம் (கி. பி.)
செயலாளர் (கி. தொ. ச)

மற்றும் மாநில சபை உறுப்பினர்களும் சொற்பொழிவாற்றுவர்.

அனைவரையும் திரண்டு வருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (E. P. R. L. F.) யாழ். பிராந்திய கமிட்டி

யாழ்ப்பாணம் 10-12 1988. (C-181)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1989

பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு இம்மன்றத்தோடு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரசித்திபெற்ற வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களை பதிவு செய்தல் 1989" எனக் குறிப்பிடப்பட்டு 23-12-88 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ இங்கு கீழ் கையொப்பமிடப்பட்டுள்ளவருக்கு கிடைக்கக் கூடியதாக பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணத்துக்கான காசோலை அல்லது காசுக் கட்டளை ஆணையாளர் மாநகர சபை யாழ்ப்பாணம் என்ற பெயருக்கு எழுதப்பட்டு விண்ணப்பத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

| பொருட்களின் விபரம் | மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் |
|---|---|
| 1. எழுது கருவி வகைகள் | 75 00 |
| 2. அச்சிட்ட பொருட்கள் | 75.00 |
| 3. சௌக்கிய பொருட்கள் (மலகூட, நாசகத்திக் களஞ்சியப் பொருட்கள், இரும்பு வாளிகள், தும்புத்தடிகள், ஈக்குக கட்டுகள், மலகூட நாசகத்தி நாசினி வகைகள் முதலியன) | 75,00 |
| 4. பிரசவ விடுதிக்கு மேலை நாட்டு மருந்துகள் | 75 00 |
| 5. மரப்பலகைகள் | |
| 6. தண்ணீர் மானிகள் | 50 00 |
| 7. பி வி சி குளாய்கள் பொருத்திகள் | 50 00 |
| 8. ஜி ஐ குளாய்கள், பொருத்திகள் | 50.00 |
| 9. சகல அளவுகளிலுமான கம்பிகள் - இரும்புகள் | 50 00 |
| 10. இரும்புச் சாமான்கள் | 50 00 |
| 11. பெயின்ற் இனமல் | |
| 12. வாகனத் தகடுகள் | |
| 13. லொறிக்கான உதிரிப்பாகங்கள் | |
| 14 சேவை இணைப்பு விநியோகக்கம்பிகள், தெருவிளக்கேற்றல் முதலியவற்றுக்கான மின்சாரப் பொருட்கள் | 250 00 |

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் நிரலில் இருந்து வழக்கமாக கூறுவிலைகள் கோரப்படும் எனினும் அவசியமாகக் காணும் இடத்து வேறு வழங்குநர்களிடம் இருந்து விலைகள் கோரிக் கொள்வனவு செய்யும் உரிமை மன்றத்திற்கு உண்டு. வேண்டப்படும்போது விலைகளை சமர்பிக்க அல்லது கொள்வனவு ஆணை விடுவிக்கப்படும் போது உரிய காலத்தில் வழங்கத் தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விபரங்களுக்கு அல்லது மாதிரிக்கு அமையாதனவாக இருக்கிற வழங்குநர்களின் பதிவுகள் அறிவித்தல் இல்லாது பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்யப்படும்.

அன்ரன் அல்பிரட்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்

(C/478)

# பிறமதங்களை தமிழ் மாணவர்கள் மதிப்பதையிட்டு தேரர் புகழாரம்

தாளையடி, டிச 10

"வடபகுதித் தமிழ் மாணவர்கள் பிறமதங்களையும் மதிப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைவதுடன், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்".

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கிறிஸ்துவின் ஒளி விழாவில் கிளிநொச்சி சிங்கள மகா வித்தியாலய அதிபர் வண கோணுசீனுவல சமணசாரதேரர் உரையாற்றும் பொழுது மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய கிறிஸ்தவ மாணவ மன்றத்தின் தலைவர் செல்வன் ஜேம்ஸ் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

வண. சமணசார தேரர் வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றுகையில் "இந்துக்களும், கிறிஸ்தவர்களும் சேர்ந்து இவ்விழாவைக் கொண்டாடுகின்றார்கள்.

எதிர்வரும் புத்தாண்டு உங்களுக்கு ஒளிமயமானதாக அமையட்டும்" என்றார்.


கிளிநொச்சி பங்குத் தந்தை வண பிதா இருதயதாஸ் உரையாற்றுகையில் "கிறிஸ்துவின் ஒளி உங்கள் அனைவர் மீதும் வீசட்டும்" என ஆசீர்வதித்தார்.

வண. சந்தானந்த பிள்ளை, கல்வி அதிகாரி எஸ் வேலாயுதம், கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு என் சேதிநாதன் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

(ச- 144)

உஷா

## உன்னதமான தையலுக்கு



உஷா ஸிக் ஸாக் எக்ஸெலா 30
- 30 டிசைன் அச்சுக்கள்
- முன் பின் தையல்
- முகப்பு அலங்காரத் தையல்
- திறந்த சட்டில் முறை ரூபா 5,850/-

சகல பாகங்களும் உலோகத்தினால் செய்யப்பட்டு பிளேட் பண்ணப்பட்டவை, ஒரு வருட உத்தரவாதம்- தவணை முறையில் பணம் செலுத்தலாம்.

உதிரிப் பாகங்கள் தாராளமாகக் கிடைக்கும் நாடெங்கிலும் விற்பனையாளர்கள் உண்டு.

உஷா

உஷா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்,
68 அத்திடிய வீதி, இரத்மலானை
தொலைபேசி: 71-6922, 7934, 7831.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி ற. டுஷ்ஜயந்தி (ஆஷா)

மறவன்புலவைச் சேர்ந்த றங்கநாதன் - அருந்தவமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வி டுஷ்ஜயந்தி தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று 10-12 88 தனது இல்லத்தில் சிறப்பாக கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பையா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், சித்தப்பாமார், அண்ணாமார், அக்காமார், பெரியம்மா சிறும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:
சிறி

(8196)

### சாவகச்சேரி ப. நோ கூ. சங்கம்

## சாக்கு விற்பனை

எம்மிடம் 4 200 வெறுஞ்சாக்குகள் விற்பனைக்கு இருக்கின்றன. கொள்வனவு செய்ய விரும்புவோர் தமது கேள்விகளை வைப்புப் பணமாக ரூபா 300/-ம், கேள்விப்பத்திரப் பணமாக ரூபா. 25/-ம் செலுத்தி இங்கு பெற்ற கேள்விப்பத்திரப் படிவத்தில் பூர்த்தி செய்து மெழுகு முத்திரையிட்ட கடித உறையில் "சாக்குக் கேள்விப் பத்திரம்" என எழுதி 16-12 88 காலை 11 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும்.

பொதுமுகாமையாளர்
சாவகச்சேரி.

(8198

+
J. M. J.

எஸ். பி. அன்ரனின் வழங்கும் வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

CANADA

# மீண்டும் கனடா

அன்புடையீர்!

வாரமதோறும் இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது சிறுகுழுக்கள் கனடாவுக்கு வெற்றிகரமாகப் பயணம் மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்ததே.

சமீபத்தில் கனடாவில் நடந்தேறிய தேர்தல் முடிவுகளும் இலங்கைத் தமிழ்மக்களின் நலன்களுக்கு உகந்ததாக அமைந்ததில் பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

எனவே

மேலும்

ஏராளமான தமிழ் அன்பர்கள் எமது பயண ஒழுங்குச் சேவைகளின் மூலம் பயனடையும் வண்ணம் பரவலான முறையில் பயண ஒழுங்குகளை அமைத்து வருகின்றோம்.

இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உங்கள் வாழ்வை வளமாக்கிக் கொள்ள முந்துங்கள்..

எமது அடுத்த குழுவில் உங்கள் பெயரையும் பதிவு செய்துகொள்ள மேலும் விபரங்களை விரிவாக அறிந்து கொள்ள...

உடனே.. நேரில்... தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறேன்....

வெளிநாட்டுப் பயண ஒழுங்கமைப்பில் அன்றும் இன்றும் என்றும் நேர்மையும் கண்ணியமும்

தவறாமல் சேவை செய்யக் காத்திருக்கும் உங்கள் நண்பன்

உங்கள் பயண அமைப்பாளர்: S. P. ANTON

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

(C-893)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய முறைப்படி தயாரிக்கப்பட்ட DSI சைக்கிள் டயர்

ஏழை முதல் செல்வந்தர் வரை அனைவருக்கும் அதி உயர் சேவை புரியும் DSI சைக்கிள் டயர் பல சிறப்புக்களைக் கொண்டது.

1. ஒற்றைக் கம்பிக்குப் பதிலாக இறப்பர் பூசப்பட்ட 4 கம்பிகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. எனவே கதஸ் பிடிப் பதில்லை பீடர் பழுதடைவதில்லை.
2. பருத்திக் கன்வசை விட உறுதிமிக்க நைலோன் கன்வஸ் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே அதிக உறுதியானது அகாலத்தில் வெடிப்பது கிடையாது
3. அதிவிசேட இறப்பர்க் கலவையினால் ஆக்கப்பட்ட பல்வேறு கட்டைவகைகள் காரணமாக விரைவில் தேய்வுறாது அதிக காலம் பயன்படுத்தலாம்.

நம்பிக்கை வாய்ந்தது!
இடைஞ்சல் அற்றது!
நீண்ட கால பாவனைக்கு
DSI டயர்!

DSI சாம்ஸன்,
றபர் இன்டஸ்றீஸ் (பிறைவேற்) லிமிட்
ஜினசேன மாவத்தை,
மஹர. கடவத்தை.

யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
**தயா ஸ்ரீ டிஸ்றிபியூட்டர்ஸ்.**
55/11, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
(8163)


# மேல் நீதிமன்ற நீதிபதிக்கு கொலைப் பயமுறுத்தல்!

கொழும்பு டிச 10

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஜி. எல். எம். டீ. சில்வாவுக்குக் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டது

தொலைபேசி மூலம் அடையாளந்தெரியாத நபர் இப்பயமுறுத்தலை விடுத்ததாக நீதிபதி டி சில்வாவே நீதிமன்றத்தில் பகிரங்கமாக வெளியிட்டார்.

தோமஸ் குக் கொள்ளை வழக்கில் குமாரசிங்கா என்ற எதிரியை விடுதலை செய்யக்கூடாது என்று அந்த நபர் சொன்னார்.

'எதிரி குமாரசிங்கா சிங்களவர் தமிழ்த் தீவிரவாதிகளுடன் சேர்ந்துள்ளார். அவரை விடுதலை செய்தால் அவருடன் நீரும் கொல்லப் படுவீர்' — என்று அந்த நபர் எச்சரித்தார்.

'எந்தப் பயமுறுத்தலும் என்னைப் பணிய வைக்காது' — என்று நான் பதிலளித்தேன்.

—இப்படி நீதிமன்றத்தில் நீதிபதி தெரிவித்தார். (உ-எ)

# கொழும்பிலிருந்து தபால் பொதிகள்

## வியாழனன்றும் வவுனியா அனுப்பப்பட்டன

கொழும்பு டிச,10

இராணுவப் பாதுகாப்புடன் வடபகுதிக்கான மற்றொரு பகுதித் தபால பொதிகள் வியாழனன்று கொழும்பு தபாலகத்தில் இருந்து விசேட பஸ் மூலம் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டன

வியாழன் காலை 6 30 மணிக்கு தபால் பொதிகளுடன் பஸ் புறப்பட்டுள்ளதாக கொழும்பு தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நூற்றுக்கும் அதிகமான பொதிகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியாவுக்கு தபால் பொதிகளை ஏற்றிவரும் பஸ்ஸில் அங்கு தேங்கிக் கிடக்கும் தபால் பொதிகள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும் (ஓ-10)

# பாலர் கலைப் போட்டியில் பரிசு பெறும் பாடசாலைகள்

யாழ்ப்பாணம் டிச 10

யாழ்ப்பாணம் பாலர் ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்பட்ட பாலர் கலைப் போட்டியில் பின்வரும் பாடசாலைகள் முதல் பரிசு பெற்றுள்ளன

அபிநயப்பாட்டு தனி - உதயகலைவாணி பாலர் பாடசாலை - பலாலி

அபிநயப்பாட்டு (குழு) - ஸ்ரீ முருகன் பாலர் பாடசாலை - வேலணை

சமயப் பாடல- ஸ்ரீ பார்வதி பாலர் பாடசாலை - அரியாலை

சமயக்கதை - அன்பு பாலர் பாடசாலை - யாழ்ப்பாணம்

கதை (தனி) - உரும்பராய் பாலர் பாடசாலை - உரும்பராய்

தமிழ்ப்பேச்சு மஹ்ழத் பாலர் பாடசாலை யாழ்ப்பாணம்,

ஆங்கிலப்பாட்டு (தனி)- கணபதி பாலர் பாடசாலை - வல்வெட்டித்துறை

மஹ்ழத் பாலர் பாடசாலை யாழ்ப்பாணம் [illegible]

ஆங்கிலப்பாட்டு (குழு - உரும்பராய் பாலர் பாடசாலை - உரும்பராய்.

ஆங்கிலக்கதை (தனி)- கலைமகள் பாலர் பாடசாலை-மலவாகம்.

எனது உபயோகம் - ஸ்ரீ முருகன் பாலர் பாடசாலை - வேலணை)

கும்மி (குழு) ஸ்ரீ பார்வதி பாலர் பாடசாலை - அரியாலை.

நடனம் (குழு) - ஸ்ரீ பார்வதி பாலர் பாடசாலை - அரியாலை.

நடனம் (தனி) - அன்புபாலர் பாடசாலை யாழ்ப்பாணம்.

தேகப்பயிற்சி (குழு)- திருவள்ளுவர் பாலர் பாடசாலை - மானிப்பாய் வநோதடை - அன்பு பாலர் பாடசாலை- யாழ்ப்பாணம். (இ-ச)


# விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிய விற்பனை முகவர் நிலையத்திற்கு கவர்ச்சி, ஆரோக்கியம், கலைப்பகுதி அறிவுள்ள திருமணமாகாத விற்பனைப் பிரதிநிதிகள் 25 வயதுக்குள் தேவை. சம்பளமும் கொமிசனும் வழங்கப்படும். முழு விபரத்துடன் 16 - 12 - 88க்கு முன் கிடைக்க விண்ணப்பிக்கவும்.

401 மே/பா உதயன், யாழ்ப்பாணம். [8183]


# வீட்டுப் பணிப்பெண்கள் உடன் தேவை

Hong Kong நகருக்கு
35 வயதுக்குட்பட்ட வீட்டுப் பணிப் பெண்கள் தேவை.
ஆங்கில அறிவு அவசியமில்லை.
சம்பளம் H. K. $ 2300
(ரூபா 9 00)
2 1/2 மாதத்திற்குள் அனுப்பி வைக்கப்படுவர்.
அண்மையில் எடுத்த பாஸ்போட் சைஸ் புகைப்படங்களுடன் மற்றும் அத்தாட்சிப் பத்திரங்களுடன்
11- 12 88இல் பி. ப. 3 மணிக்குள் உடன் தொடர்பு கொள்ளவும்:

**K. பாலமுருகன்**
குளிப்பன் லேன்,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை

ரவி ஸ்ரோர்ஸ்
செட்டியார்மடம் சந்தி,
வட்டுக்கோட்டை. (8087)


# ஓராண்டு நினைவஞ்சலி



**திரு கனகரத்தினம் பாக்கியநாதன்**
(கிளாக்கர்)

(முன்னைநாள் வனபரிபாலன திணைக்கள களஞ்சியப் பொறுப்பாளரும். தற்போதைய ஸ்ரீகணேசன் அயன் வேக்ஸ் உரிமையாளர், ஒட்டுமடம், யாழ்ப்பாணம்)

மண்ணில் மலர்வு: 30 - 09 - 1929
விண்ணில் உயர்வு: 21 - 12 - 1987
திதி: 10 - 12 - 1988

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் அன்புமொழி பேசி எங்களை வழிநடத்திய எங்கள் குலவிளக்கே! எங்களையெல்லாம் தனிமரமாக்கி மனம்பதைக்க உயிர்நீத்து விட்ட அன்புத் தெய்வமே! புன்சிரிப்புத் தவழும் நின்முகத்தை இனி எப்போ காண்போம்! எத்தனையோ கற்பனைகள், எத்தனையோ எண்ணங்கள் நீங்கள் மட்டுமல்ல நாங்களும் கொண்டிருந்தோம். எல்லோருடனும் அன்பாய்ப்பழகி நீதிநெறி நின்று உலகம் உவக்கும் வகையில் உதவிகள் பல செய்து வாழ்ந்துவரும் வேளையில் காலன் எனும் அரக்கன் கப்பாக்கிரவை வடிவில் வந்து உங்கள் உயிரைக் கவர்ந்தானே!

அமரத்துவம் எய்திய எம் தலைவா
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்!

தங்கள் நினைவில் வாடும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
நண்பர்கள், உறவினர்கள்.

ஸ்ரீ கணேச பவனம்.
அளவெட்டி தெற்கு, அளவெட்டி. (8168)


# North Lanka College of Medical Practitioners

(Incorporated by Act No. 45 of 1988)

Applications are invited from qualified students wishing to follow a course of study and training in Medicine leading to a M B B S Degree at the North Lanka Medical College, Jaffna established and run by the above incorporated body. Applications should be made in the prescribed form which could be obtained at the College Office at No 164 Fourth Cross Street Jaffna on payment of Rs 100 00. Requests for Application forms by post should be accompanied with Postal or Money Order for Rs 100 00 drawn in favour of the College upto 20 01-1989 All completed Application forms should be handed at the office or sent under Registered post to the Director to reach him on or before 31st January, 1989.

Secretary
N L C. M P.

(C-871)



# ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம்- ஆனால் தவறாகப் பேசி விடுவோமே என்ற தயக்கம்-

# இதுதானே உங்களது பிரச்சினை?

பரீட்சையில் சித்தி பெற்றவர்களிடம் கூட இக்குறை காணப்படுகிறது இதற்கான காரணம் நாம் பாடசாலைகளில் படித்தது

WRITTEN ENGLISH

ஆனால் நடைமுறையில் நாம் பிறரிடம் உரையாடத் தேவைப்படுவது

SPOKEN ENGLISH

எனவே முறையான பயிற்சி இருந்தால் யாரும் சாதாரணமாக ஆங்கிலத்தில் உரையாட முடியும்.

இதனைக் கருத்திற் கொண்டு

BRIGHT TRAINING CENTRE

நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால்முறையில் மிகச் சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப்படுத்துகிறார்கள்

உளவியல் அடிப்படையில்,
மிக மிகப் புதுமையான முறையில்

SPOKEN ENGLISH

பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத் தேறலாம்.

விபரங்களுக்கு முத்திரையொட்டிய சுய விலாசமிட்ட கடிதத்துடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE**
P. O. Box 162, Colombo.
(7083)


# பூநகரி பிரதேச சபை 1989ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

பூநகரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், எருத்தரவை வாகனம் நிறுத்தும் காலை ஆகியவற்றை 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 1989 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் 14 12 - 1988 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 00 மணிவரை பூநகரி பிரதேச சபை விசேட ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும். மேற்படி கேள்விகளுக்குரிய கேள்விப் பத்திரப் பணம் பிணைப்பணத்தையும் செலுத்தி 13-12 1988ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை பூநகரி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் கேள்விப்பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்

கேள்விகள் பற்றிய மேலதிக விபரங்களை சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ள முடியும்

**பூநகரி உப அலுவலகம்**

| | வைப்புப் பணம் | பத்திரக் கட்டணம் | ★ ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|
| 1. பூநகரி பொதுச் சந்தை | 500 00 | 50 000 | 25 000 00 |
| 2. பூநகரி ஆட்டிறைச்சிக் கடை | 100 00 | 50 00 | 1500 00 |
| 3. பூநகரி மாட்டிறைச்சிக் கடை | 100 00 | 50 00 | 4000 00 |
| 4. பூநகரி (வாடியடி, சங்குப்பிட்டி) வாகன காலை | 1000 00 | 50 00 | 2000 00 |

**பல்லவராயன்கட்டு, இரணைதீவு உப அலுவலகம்**

| | | | |
|---|---|---|---|
| 1. நச்சிக்குடா மாட்டிறைச்சிக் கடை | 100 00 | 50 00 | 1000 00 |
| 2. வலைப்பாடு மாட்டிறைச்சிக் கடை | 100 00 | 50 00 | 1000 00 |
| 3. இரணைதீவு மாட்டிறைச்சிக் கடை | 100 00 | 50 00 | 1000 00 |
| 4. பல்லவராயன்கட்டு எருத்தரவைகள் | 1000 00 | 50 00 | 1000 00 |

க. பாலசுப்பிரமணியம்
விசேட ஆணையாளர்,
பிரதேச சபை,
பூநகரி

பிரதேச சபை அலுவலகம்,
பூநகரி [04 12-1988]. (C 904)

# மக்கள் முகம்

## ஓவியர் திலகம் பட்டமளிப்பு



யாழ்ப்பாணம் டிச. 10

நல்லூர் - அருள்மிகு ஸ்ரீ கைலாசபிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேக விழாவையொட்டி கல்வியங்காடு ஓவியக் கலைஞர் ஓவிய விநோதர் திரு. விஸ்வம் நடராசாவுக்கு 'ஓவியர் திலகம்'' என்னும் சிறப்புப் பட்டம் வழங்கப் பட்டது


ஸ்ரீ கைலாசபிள்ளையார் ஆலயத்தின் பிரதம குரு. சிவஸ்ரீ, குமணிக் குருக்கள், திரு விஸ்வம் நடராசாவுக்கு இப்பட்டத்தை வழங்கினார்.

ஓவியர் திலகம் திரு விஸ்வம் நடராசா இலங்கையில் பல ஆலயங்களில் [illegible] செய்து பாராட்டப் பெற்றவர். (க)



**உஷா** தையல் மெஷின் தொடர்



டொமெஸ்டிக் டிலியூக்ஸ் (நேரான தையல்)
ட்ரொப் பீட் பொறிமுறையும் முகப்பு அலங்காரத் தையலும்.
ரூபா 3850/-
தைமற்காரர் மொடல் ரூ. 4000/-




எக்ஸெலா 30 (பின்னால் தைப்பதற்கும் நேரான தையலுக்கும்.)
30 வடிவமைப்பு அச்சுக்கள்
ரூபா. 5,850/-



ஸிக் ஸாக் எக்ஸேலா 55
பிக்கொட் விளிம்பு தைக்கும் ஊசியும் இரட்டை ஊசியும் உண்டு.
55 வடிவமைப்பு அச்சுக்கள், ஸிக்ஸாக் தையல், அலைவிளிம்புத் தையல், பொத்தான் துளை தைத்தல், முதலியன.
ரூபா. 7850/-

சகல பாகங்களும் உலோக மெருகிடப்பட்டவை.
ஒரு வருட உத்தரவாதம் இலகு தவணை முறையிலும் வாங்கலாம்,
அண்மையிலுள்ள உஷா விற்பனையாளரிடம் இன்றே விரையுங்கள்.
விநியோகத்தர்:
[illegible] இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்
68, அத்திடிய றோட், ரத்மலானை.
தொலைபேசி: 71-6922, 71-7934, 71-7381
Mel Ads 9353


# 31ம் நாள் நினைவு அஞ்சலி



**உயர்திரு. பண்டிதர் க இராசையா**
(வேலணை ம ம. வித்தியாலய முன்னாள் இளைப்பாறிய அதிபர்)

மலர்வு — 06.04.1923
உதிர்வு:— 09.11.1988

எங்களுக்குத் தந்தையாய்
அருமைக் கணவராய்
இலசொற் கொற்றவனாய்
இனசனத்துக் கினியவனாய்
உள்ளங் கபடின்றி உழைத்த உத்தமனாய்
ஊரார்க்குப் பணிசெய்து உயர்ந்த தலைமகனாய்
ஏத்திக் கற்றோர்க்கும் என்றுமோர் நற்கதியாய்
எங்களெண்ணமெல்லாம் நிலைத்தவரே
இன்றும்மைக் காணாது தவித்துப்
புலம்புகின்றோம்

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

(8088)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று.

**பொருள்:**
காவல் செய்து வைத்தாலும் காவல் ஆகாத கீழ்மக்களின் தீய நட்பு, ஒருவனுக்கு ஏற்படுவதைவிட ஏற்படாமலிருப்பதே நன்மையாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலை

இல:- 292/2 நாவலர்வீதி தொலைபேசி 24005
யாழ்ப்பாணம் 22073
10-12-1988 த. பெ. இல 83


## வெள்ளத்துள் நாவற்றும் நிலையைத் தடுக்குக!

கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலை என்று ஒன்று உண்டு.

வெள்ளத்தால் சூழப்பட்ட தண்ணீர்க் குழாயில் குடிப்பதற்குச் சொட்டு தண்ணீர் தானும் ஒழுகாதிருப்பதும் செய்திப் படங்களாகப் பத்திரிகைகளில் வெளிவருவதுஉண்டு.

அதே போல "வெள்ளத்தின் நாவற்றியவாறு" என்று மாணிக்கவாசக சுவாமிகள், திருவாசகம் எனும் தேனில் ஓரிடத்தில் கருத்துச் சொட்டக் கூறுகிறார்.

இந்த இருந்தும் இல்லாத நிலை யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு ஏற்படக்கூடிய அபாய நிலை ஒன்று இப்போது தோன்றி உள்ளது அது அவசர அவசியமாக நீக்கப்பட வேண்டியது

ஆம். கடந்த வருட இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து, இன்னலுற்ற குடாநாட்டு மக்களுக்கு உடனடி நிவாரணமாக வழங்குவதற்கென்று கொழும்பு அரசாங்கம் வழங்கிய பணத்தில் பெரும்பகுதி மக்கள் கைக்குக் கிடைக்காமல் கொழும்புக்கே திரும்பிச் செல்லக்கூடும் என்ற அபாய நிலைமையையே இங்கு குறிப்பிடுகிறோம்

முதலில் ஒதுக்கப்பட்ட ஏழரைக் கோடி ரூபாவில் ஒன்றரைக் கோடி ரூபா மட்டுமே மக்கள் கைக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. அடுத்த கட்டமாக ஒதுக்கப்பட்ட ஏழரைக்கோடி ரூபாவுமாகச் சேர்த்து மொத்தம் பதின்மூன்றரைக் கோடி ரூபா இன்னும் மக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும்.

அரசாங்க நிதி வருடம் இந்த மாதத்தோடு முடிவடைகிறது. அதனால் மாத முடிவுக்குள்—இன்னும் இருபது நாட்களுக்குள்—பதின்மூன்றரைக் கோடி ரூபாவும் வழங்கப்பட்டாகவேண்டும். இல்லையேல் அதனைச் செலவிடப்படாத பணமாகக் கருதி திறைசேரி திரும்பப்பெற்றுவிடும்.

பதின்மூன்றரைக்கோடி ரூபாவையும், 20 நாட்களுக்குள், அதுவும் நடைமுறையில் உள்ள வேலைநாட்களில் செயலக உத்தியோகத்தர்களால், உரியமுறைப்படி, விதிப்படி வழங்க முடியாது என்பது அரசாங்க அதிகாரிகளின் நிலைப்பாடு

எனினும், எஞ்சிவரும் 20 நாட்களிலும் அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் நாள், நேரம் நோக்காது ஊக்கத்துடன் துரிதமாகப் பணியாற்றினால் திரும்பிச் செல்லக்கூடிய தொகையில் மிகப்பெரும் பகுதியை மக்கள் கைக்குச் சேர்க்கமுடியும் என்று அனுமானிக்கப்படுகிறது

இல்லையேல் சுமார் ஒரு லட்சத்து முப்பதாயிரம் குடும்பங்கள் உடனடி நிவாரணப் பணத்தை பெறமுடியாமற்போகும் நிலை உருவாகும் என்று அரச செயலக வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

கடந்த வருட அனர்த்தங்களின்போது பாதிக்கப்படாத குடும்பம் இல்லை என்று கூறுமளவுக்கு குடாநாட்டு மக்கள் எல்லோருமே தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து கோவில்கள், பாடசாலைகளில் தஞ்சம் புகுந்தனர்.

மற்றும் பலருக்கு மரணம் வீடுகளையும், வீதிகளையும், ஏன் அகதி முகாம்களைக் கூடத் தேடி வந்தன.

இப்பகுதி மக்களுக்கு ஏற்பட்ட உயிர், உடைமை நஷ்டங்களுக்கு - அவற்றோடு ஒப்பிடும்போது—அரசு ஒதுக்கிய நிவாரணம் என் அளவானது

இந்தத் தொகையைத் தானும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அரசு தருமா என்று பலரும் சந்தேகப்பட்டது உண்டு ஏனெனவே பல தடவைகளில் வெளிநாடுகள் மூலம் கிடைத்த நிவாரணங்கள் தமிழ்ப் பகுதிகளுக்கு உரிய முறையில் வந்து சேரவில்லை

ஆகையால் இம்முறை அரசு 'கிள்ளித் தெளித்த' நிவாரணப் பணமேனும் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வழி செய்ய வேண்டும். அது செலவிடப்படாத பணமாகத் திரும்பப் போக அனுமதிக்கக் கூடாது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும், பணம் கொழும்புக்குத் திரும்பிப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என மக்கள் சார்பில் விநயத்துடன் வேண்டுகிறோம்.

வந்து சேர்ந்த, சேரும் நிதியை உரிய திகதிக்கிடையில், பாதிக்கப்பட்ட மக்கள் பெயரில் வங்கிகளுக்கு மாற்ற முடியுமா என்ற சாத்தியத்தையும் ஆராய வேண்டும். ஏதோ ஒரு மாற்றுவழி மூலம் ஒதுக்கப்பட்ட பணம் கொழும்புக்குச் செல்லாது தடுப்பதே நோக்கமாக இருக்க வேண்டும்.

இது விடயத்தில் எல்லோரும் ஒரே மனதுடன், நோக்குடன் செயற்பட்டு மக்களுக்கு உதவவேண்டும்.

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல்

# ஜெயலலிதா, கருணாநிதி, மூப்பனாருக்கு எதிராக தலா 200 சுயேச்சை வேட்பாளர்கள்

### வாக்குகளைப் பிரிக்க வீரப்பக் கவுண்டர் திட்டம்

சென்னை, டிச 9

நடைபெறவிருக்கும் தமிழக சட்டமன்றத் தேர்தலின் போது கலைஞர் கருணாநிதி, கருப்பையா மூப்பனார், ஜெயலலிதா ஆகிய மூவரும் எந்தத் தொகுதியில் போட்டியிட்டாலும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் எதிராக இருநூறு பேரை சுயேச்சை வேட்பாளர்களாக நிறுத்தப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

'அகில இந்திய சுயேச்சை வேட்பாளர்கள் சம்மேளனத்தைச்' சேர்ந்த வீரப்பக் கவுண்டர் என்பவர் இந்த அறிவிப்பை விடுத்திருக்கிறார்.

இதுவரையில் இந்திராகாந்தி, வி.பி.சிங், கருணாநிதி, எம்.ஜி.ஆர். உட்பட பல அரசியல் தலைவர்களை எதிர்த்து 19 தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியுற்றவர் இவர்.

அவர் விடுத்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

'ஆளுக்கு ஆள் நானே முதல்வர்' என்று கூறிக்கொண்டு திரிகிறார்கள். அவர்களின் முகத்தில் கரியைப் பூசப் போகின்றேன்

கலைஞர், மூப்பனார், ஜெயலலிதா மூவரையும் எதிர்த்து ஒவ்வொரு தொகுதியிலும் இருநூறு பேரை நிறுத்திவாக்கைச் சிதறடிக்கப் போகிறேன்.

உதாரணமாக ஜெயலலிதாவை எதிர்த்து நூறு ஆண்களையும், நூறு பெண்களையும் நிறுத்தப் போகிறேன். ஜெயலலிதா என்றபெயரில் 13 பேர், ஜெயந்தி என்ற பெயரில் 20 பேர், செல்வி என்ற பெயரில் 9 பேர்... இப்படி 'ஜெ' என்ற எழுத்தில் பெயர் தொடங்குகின்ற நூறு பெண்கள் மற்றும் ஆண்களை நிறுத்துவேன். முடிவு என்னகும்...?

'ஒரிஜினல்' ஜெயலலிதாவின் பெயர் வாக்குச் சீட்டில் எங்கேயோ நடுவில் போய் மாட்டிக் கொள்ளும் பாமரமக்கள் அவங்க பேரை அவ்வளவு சுலபமாக, நிச்சயமாகக் கண்டுபிடிக்க முடியாது.

ஆகக் கூடிப்போனால் ஒரு வேட்பாளருக்கு கட்டுப்பணம் 250 ரூபா நோட்டீஸ் போஸ்டர் செலவு ஆளுக்கு நூறு ரூபா— அவ்வளவுதான் செலவழிக்கப் போகின்றேன்.

இந்தத் தேர்தலில் ஜானகியை மட்டும் நான் எதிர்க்கவில்லை. ஏனெனில் அவர் 'நானே முதல்வர்' என்று அறிவிக்கவில்லை. அதுமட்டுமல்ல— அவர் நிச்சயமாக முதல்வராக மாட்டார் என்பதும் எனக்குத் தெரியும்

இதே போல எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் எந்தக் கட்சியுடனும் கூட்டுசேராமல் காங்கிரஸ் தனித்து நின்றால் மூப்பனாருக்கு எதிராக 200 பேரை நிறுத்துவதையும் வாபஸ் பெறுவேன

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் அதிக இடங்களில் ஜெயிப்பது நிச்சயம்

அதற்குப் பிறகு இந்தத் தேர்தலில் வெற்றி பெறும் எமது 'அகில இந்திய சுயேச்சை வேட்பாளர் சம்மேளன உறுப்பினர்களையும் சேர்த்து கூட்டு மந்திரி சபை அமைப்பேன்.

—இப்படி அவர் அறிவித்திருக்கிறார் (உ)

## இயேசுபிரான் பிறந்த பெத்லஹேமில் இம்முறை கிறிஸ்மஸ் இல்லை!

பெத்லஹேம் டிச 9

இயேசுபிரான் பிறந்த பெத்லஹேம் நகரில் இம்முறை நத்தார் தினக் கொண்டாட்டங்கள் நடைபெறா

பலஸ்தீன நகரான பெத்லஹேமின் துணை மேயர் ஹன்னா நிஸான் இதனைத் தெரிவிகதார் என்று டிபிஏ செய்தி ஸ்தாபனம் அறிவித்தது

இஸ்ரவேலினால் கைப்பற்றப்பட்ட மேற்குக்கரை அரபுப் பிரதேசத்தில் பெத்லஹேம் உள்ளது.

இஸ்ரவேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராக பலஸ்தீன மக்கள் நடத்தி வரும் எழுச்சிக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக நத்தார் தினக் கொண்டாட்டங்கள் ரத்துச் செய்யப்படுவதாக துணை மேயர் ஹன்னா நிஸான் தெரிவித்தார்.

'நத்தாரைக் கொண்டாடுவதற்கு எதுவித காரணமும் இல்லை'

'இறந்த எம்மவர்களுக்கும் தடுப்புக் காவலில் உள்ளவர்கள் குறித்தும் நம் எமது கவலையைத் தெரிவிக்க வேண்டும்.'

'நத்தார் அன்று இஸ்ரேலிய,' பலஸ்தீனிய பிரமுகர்கள் கொள்ளும் வைபவம், மற்றும் உத்தியோக பூர்வமான நத்தார் கொண்டாட்டங்கள், வருடாந்த சாரண மாணவர் அணி வகுப்பு ஆகியன இம்முறை ரத்துச் செய்யப்படுகின்றன.

'இயேசு பிரான் பிறந்ததை நினைவுபடுத்தும் மாட்டுத் தொழுவம் உள்ள சதுக்கம் வெளிச்சம் இன்றி இருளில் மூழ்கியிருக்கும். வழமை போலநு கண்ணைப்பறிக்கும் வர்ண மின்சார பல்புகளால் தொழுவம் அலங்கரிக்கப்பட மாட்டாது

"தொழுவம் உள்ள சதுக்கத்தில் காணப்படும் 12 மீற்றர் உயர கிறிஸ்மஸ் மரம் வெறுமையாகக் காட்சியளிக்கும்" —

இப்படி துணை மேயர் நிஸான் தெரிவித்தார்.

தேவாலய அதிகாரிகள் இது குறித்துத் தெரிவித்ததாவது;

வழமைபோன்று திருப்பலிப்பூசை தேவாலயத்தில் நடத்தப்படும்.

ஆனால் மத ஊர்வலம் ஒன்று மாட்டுத் தொழுவம் உள்ள சதுக்கத்துக்கு தேவாலயத்தில் இருந்து செல்லுமா என்பதுபற்றி முடிவு எடுக்கப்படவில்லை.

இப்படி தேவாலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு நத்தார் தினம் பலஸ்தீனரின் தாயகம் மீட்கும் கிளர்ச்சி ஆரம்பமான 3 வாரங்களில் வந்தது.

அப்போது பெத்லஹேம் நகர மேயர் உத்தியோக பூர்வ நத்தார் தின வைபவத்தையும் சாரண மாணவர் அணி வகுப்பையும் ரத்துச் செய்து இருந்தார்.

ஆனால் மாட்டுத் தொழுவம் உள்ள சதுக்கம் வர்ண ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது

நத்தார்மரம் நியோன் பந்து மின் விளக்குகளால் மின்னிக் கொண்டிருந்தது.

இப்படி டிபிஏ செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. (எ)

### பிரதமர்காந்தியின் சீன விஜயம்

புதுடில்லி, டிச 9

பிரதமர் ராஜீவ்காந்தியின் 5 நாள் சீனப் பயணம் இம்மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகிறது

இத்தகவலை புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அலுவலகம் நேற்று அறிவித்தது. (எ)

## மண்டேலா இடமாற்றம்

தென் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்ஸன் மண்டேலா நேற்று ஆஸ்பத்திரியில் இருந்து பாதுகாப்புடன் வீடு ஒன்றுக்கு நேற்று இடமாற்றஞ் செய்யப்பட்டார்

அவருடன் தொடர்ந்து தங்கியிருக்க அவரின் நெருங்கிய உறவினர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று தென் ஆபிரிக்க அரசு அறிவித்தது.

இச் சலுகையை ஏற்கப்போவது இல்லை என்று திருமதி வின்னி மண்டேலாவின் சட்டத்தரணிகள் தெரிவித்தனர் (எ)

## இந்தியாவிடம் உதவிகேட்கிறார் ஹையூம்

மாலைதீவு படையினருக்கு பயிற்சி அளித்துதவும்படி ஜனாதிபதி ஹையூம் இந்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

2 நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு மாலே திரும்பும் முன்னர் ஜனாதிபதி ஹையூம் செய்தியாளர் மாநாட்டில் பேசினார்.

அப்போதே இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்,

மாலைதீவு அரசு விரும்பும் வரை இந்தியப் படைகள் மாலேயில் இருக்கும் என்றும் அவர் சொன்னார்,

அண்மையில் தோல்வியில் முடிந்த சதிப்புரட்சி காரணமாக இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றை நீங்கள் ஏற்படுத்துவீர்களா?— இப்படி செய்தியாளர் கேட்டனர்

ஜனாதிபதி ஹையூம் இதற்குப் பதிலளிக்கையில் "இதற்கு இன்னமும் காலம் வரவில்லை"— என்று சொன்னார். (எ)

## மாணவர் கலை இலக்கிய ஆர்வம் குறையக் காரணம் 'ரெலிவிஷனும், ரியூசனுமே'

தாளையடி டிச 10

மாணவர்களிடையே கலை, இலக்கிய ஆர்வம் குறைவதற்கு ரெலிவிஷனும் ரியூசனுமே காரணம்.

எழுத்தாளரான திரு. கோப்பாய் சிவம் இவ்வாறு கூறினார்

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய உயர்நிலை மாணவ மன்றத்தினர் வெளியிட்ட 'திவ்யம்' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய உயர்நிலை மாணவமன்ற தலைவர் செல்வன் க. குமாரச்சந்திரன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இவ்வைபவம் நடைபெற்றது

வைபவத்தில் கோப்பாய் சிவம் தொடர்ந்து உரையாற்றும்போது.

'இலக்கியங்கள் சஞ்சிகைகளாக மக்களைச் சென்றடைகின்றன இதனால் தான் பாடசாலைகளின் பாடத்திட்டங்களில் சஞ்சிகைகள் என்ற அம்சமும் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது

இப்படி அவர் கூறினார்.

வைபவத்தில் கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு என். சோதிநாதன், கனக. மகேந்திரா, எஸ். இராசநாயகம், மகேஸ்வரதாஸ், சிவராசா, தர்மானந்தசிவம், செல்வி கோமளகௌரி ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

நூலின் முதற்பிரதியை வைத்தியக் கலாநிதி சிறீரஞ்சன் பெற்றார்.

(இ-144)

### சாயிபாபாவின் பிறந்த தின வெளியீடு

சழிபுரம், டிச 10

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் அருளுரையில் இருந்து

"சில முத்துக்கள்" என்ற தொகுப்பு நூலை பாபாவின் அறுபத்தி மூன்றுவது பிறந்ததின வெளியீடாக, ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி திருநெல்வேலிக் கிளையினர் வெளியிட்டனர்.

திரு. செ ஞானசேகரம் இந்நூலைத்தொகுத்து எழுதியுள்ளார்

(ச-28)

சிறில் மத்கியு அறிக்கை:

## நாட்டைப் பிரிக்கும் இரகசிய நடவடிக்கை

கொழும்பு, டிச 10

சுதந்திரக்கட்சி 5 கட்சிகளுடன் செய்து கொண்ட உடன்பாடு நாட்டைப் பிரிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள இரகசிய நடவடிக்கை.

முன்னாள் அமைச்சர் சிறில் மத்தியூ, பௌத்த மக்கள் சம்மேளனத் தலைவர் என்ற முறையில் விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு கண்டித்துள்ளார்.

ஐந்து கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனம் ஆங்கிலத்தில் தான் வெளியிடப்பட்டு உள்ளது. பெரும்பான்மை பௌத்த சிங்களவருக்குத் தெரியாமலிருக்க வேண்டும் என்பதற்காக அது சிங்களத்தில் வெளியிடப்படவில்லை

இந்த உடன்பாட்டைச் செய்து பண்டாரநாயக்காவின் கொள்கைகளைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு தனி நகரம் ஒன்றை அமைக்க வேண்டும்.

இப்படி திரு சிறில் மத்தியூ அறிக்கையில் தெரிவித்து [illegible]

வடமராட்சி கிழக்கில்

## புதிய உதவி அரச அதிபர்பிரிவு

### நான்கு வருடத்துக்கு முந்திய கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச 10

வடமராட்சி கிழக்கில் புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டியது புதிய விடயமல்ல. அது தனியான நிர்வாகப் பிரிவாக இயங்கி வந்தது.

புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவை உண்டாக்குவதனால் (1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பு புள்ளி விவரப்படி) சுமார் 15 000 மக்கள் தங்களுக்குரிய சேவைகளைச் சுலபமின்றிப் பெறமுடியும்

இவ்வாறு வடமராட்சி கிழக்கில் புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவை உண்டாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி—

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புவியியல் துறைத்தலைவர் பேராசிரியர் பி பாலசுந்தரம் பிள்ளை 1984 பெப்ரவரி 14 ஆம் திகதியிட்ட மகஜர் ஒன்றை—

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு கே. டபிள்யு. தேவநாயகத்துக்கு அனுப்பி வைத்திருந்தார்.

1984 இல் விடுக்கப்பட்ட இந்தக் கோரிக்கை நான்கு வருடங்களுக்குப் பிறகாவது இப்போது நிறைவேற்றப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயம் என்று பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உதயனுக்குத் தெரிவித்தார்.

திரு. பாலசுந்தரம் பிள்ளை அப்போது அனுப்பிய மகஜரில், வடமராட்சி கிழக்கில் புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவை ஏன் நிறுவ வேண்டும் என்பதற்கான சரித்திரபூர்வமான காரணம், அந்தப் பகுதியினர் பூகோள விவரம், குடிசனப் பரம்பல், பொருளாதார வளம், பிரிவில் அடங்க வேண்டிய கிராம சேவகர் பிரிவுகள், அலுவலகம் அமையவேண்டிய இடம் என்பனவற்றை விளக்கமாக விவரித்திருந்தார்.

பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தனது மகஜரில் தெரிவித்திருந்ததாவது:-

1940 ல் வடமராட்சியில் இரு மணியகாரன் பகுதிகள் இருந்தன. அவை வடமராட்சி கிழக்கும் மேற்கும் ஆகும் 1950ல் இவ்விரு மணியகாரன் பகுதிகளும் வடமராட்சிஎன்ற பெயரில் ஒரு காரியாதிகாரி பகுதியாகியது

1960ல் வடமராட்சி

(6 ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி கிழக்கு மக்களின் முன்னேற்றத்துக்கு வழி செய்யும்

வடமராட்சி, டிச. 10

பொதுமக்களினதும் பல பொதுஸ்தாபனங்கள், சபைகள் நிறுவனங்களினதும் நீண்டகால வேண்டுகோளிற்கு இணங்க வடமராட்சி வடக்கு - கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக இம்மாதம் 5ஆம் திகதி தொடக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான அறிவித்தல் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது

புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு பின்வரும் கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கி இயங்கும்

குடாக்கரையூர், அம்பன், குடத்தனை, நாகர்கோவில் வடக்கு, நாகர்கோவில் தெற்கு, செம்பியன்பற்று, மருதங்கேணி, உடுத்துறை, [illegible] போக்கறுப்பு, கண்டிக்குளம்.

புதிய உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் அம்பனில் அமையும்.

சுண்டிக்குளம் கிராம சேவகர் பிரிவு தொடக்கம் 25 மைல் நீளமுள்ள மற்றும் கரையோரப் பகுதி கிராமசேவகர்பிரிவு மக்கள் பருத்தித்துறை உதவி அரசாங்கஅதிபர் காரியாலயத்துடன் தொடர்பு கொள்வதில் உள்ள பிரயாணக் கஷ்டங்களையிட்டும் மேலும் இப் பகுதியினது துரித முன்னேற்றத்தையும் மனதிற் கொண்டு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு வை. மு பஞ்சலிங்கம் செய்த அவசிய சிபார்சுக்கிணங்க உள்நாட்டு அமைச்சர் திரு கே. டபிள்யூ தேவநாயகம் இந் நிர்வாக அமைப்பை ஏற்படுத்தியுள்ளார்.

நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் புதிய உதவி அரசாங்க அதிபர்பிரிவுகள் அமைக்கும் பலவேண்டுகோள்கள் இருந்தும் இப்புதிய வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு முன்னுரிமை கொடுத்து, உள்நாட்டமைச்சர் இந்த நிர்வாக அமைப்பு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்.

வடமராட்சி கிழக்கு மக்களின் வசதிகளுக்கும் இப் பகுதியின் விசேட முன்னேற்றத்திற்கும் இந்தப் புதிய அரசாங்க அதிபர் பிரிவு ஓர் வரப்பிரசாதமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு யாழ் செயலக தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு கே கோபலரத்தினம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீம் சுகாதார தூபம்"
உங்கள் பொன்னுன மேனியில்
நுளம்பு குத்துகின்றதா?
இன்றே வாங்கிப் புகையுங்கள்.
"நீம் சுகாதார தூபத்தை"
இது வேப்பம் விதையில் இருந்து
தயாரிக்கப்பட்டது.
சிறிய பைக்கற் விலை
ரூபா ஒன்று மட்டுமே.
- ஓர் மில்க்வைற் தயாரிப்பு

# உதயன்

10 12 1988 சனிக்கிழமை

மில்க்வைற் செய்தி இதழ் - 156
எப்படி மெழுகுவர்த்தி பற்ற வைத்த
உடனேயே பிரகாசிக்க ஆரம்பிக்கிறதோ,
அப்படியே நல்ல காரியங்களும் இந்த
இருண்ட உலகில் சுடர்விட்டு
பிரகாசிக்கும்''
— ஷேக்ஸ்பியர்
20 மில்க்வைற் நீலசோப்
மேலுறைகளை அனுப்பி
புதிய வெளியீடான செய்தி இதழ் 156ஐ
பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

## மீளகுடியமர்தல் நிவாரணம் இவர்களுக்கு இல்லை!

யாழ்ப்பாணம், டிச 10

தென் இலங்கை இராணுவத் தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டு அண்மையில் விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படமாட்டாது.

யாழ் செயலக வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன

தென் இலங்கைத் தடுப்பு முகாம்களில் இருந்து விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு உடனடிநிவாரணம் 2 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. எனவே இவர்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கவேண்டாம் என்ற அறிவுறுத்தல்கள் உதவி அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன (ஒ-5)

## இன்று

குருநகர் டிச 10

சர்வதேச மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடும் முகமாக இன்று காலை 10 மணியில் இருந்து நண்பகல் 12 மணிவரை வழிபாட்டுக் கூட்டமொன்று யாழ். புனித மரியாள் (அடைக்கல மாதா) ஆலய மண்டபத்தில் நடைபெறும். (ஒ-51)

## கிரிக்கெட்

புதுடில்லி டிச 10

நியூசிலந்துக்கும் இந்தியாவுக்கும் இடையேயான ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி இன்று விசாகப்பட்டினத்தில் நடைபெறும். (உ-எ)

## பஸ் நடத்துநருக்கான நேர்முகப் பரீட்சை ஜனவரியில்

யாழ்ப்பாணம், டிச,10

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு பஸ் நடத்துநர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் ஜனவரி மாதத்திலேயே நடைபெறும்.

இந்தப் பதவிக்கு இதுவரை மூவாயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர். (உ-ஒ 10)

## உற்பத்தி பாதிக்கப்பட்ட போதிலும்: போதியளவு சிமெந்து வெளிச்சந்தையில்

யாழ்ப்பாணம், டிச. 10

வடபகுதிக்கான மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டதையடுத்து கடந்த 23-ஆம் திகதி முதல் காங்கேசன்துறையில் சிமெந்து உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது.

எனினும் வடக்கில், வெளிச்சந்தையில் குறிப்பிடத்தக்க அளவு சிமெந்து கையிருப்பில் இருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்பகுதிக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டிருப்பதால் சிமெந்தை வெளியூர்களுக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாகவே உள்ளூர் சந்தையில் போதியளவு சிமெந்து கையிருப்பில் உள்ளது. (உ-ஐ 5)

## புதிய உதவி......

(5ஆம் பக்க தொடர்ச்சி)

பகுதி மீண்டும் வடமராட்சி வடக்கு - கிழக்கு, வடமராட்சி தெற்கு - மேற்கு என்று பிரிக்கப்பட்டன. 1977ல் பருத்தித்துறை உடுப்பிட்டித் தொகுதிகளின் எல்லைகள் மாற்றப்பட்டாலும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் எல்லைகள் மாற்றப்படவில்லை. ஆகவே உத்தேச வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஓர் புதிய பிரிவல்ல. இது பழைய நிர்வாகப் பிரிவைப் புதுப்பித்தலாகும்.

பூகோள ரீதியாக வடமராட்சி கிழக்கு யாழ் தீபகற்பத்தில் ஒரு மாவட்டப் பிராந்தியமாகும்.

இங்குள்ள பெரும்பாலான மக்கள் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியில் மருதங்கேணியும் நாகர்கோயிலும் இரு பிரதான நிலையங்களாகும். புதிய வடமராட்சி கிழக்கு அரசாங்க அதிபர் காரியாலயம் அமைக்கப்படும் பொழுது அது மருதங்கேணி சந்தியில் நிறுவப்படவேண்டும்—

— இப்படி அம் மகஜரில் கூறப்பட்டிருந்தது. (அ—ச)

## மறுவாழ்வு....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

வலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள 31 பேர் விரைவில் விடுதலை செய்யப்படுவர்.

ஏனைய 137பேர் காலக்கிராமத்தில் விடுவிக்கப்படுவர்.

தொண்டர் படைக்கு மேலும் 400பேர் திரட்டப்பட்டுள்ளனர்

இவர்களையும் சேர்த்து தொண்டர் படையின் தற்போதைய பலம் 1,200 ஆகும்

இது மேலும் 7 ஆயிரமாக அதிகரிக்கும்.

வடக்கு- கிழக்கு மாகாண பாதுகாப்புக்குப் பொறுப்பாக இப்படை இருக்கும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இது பொலிஸ் படையாக செயற்படும்.

எல்லா அமைப்புக்கள், அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிரந்தர அமைதியைக் கொண்டு வர நாம் பாடுபடுவோம்.

தேர்தலில் பங்குபற்றுத தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், ஏனையோரும் ஜனநாயகமுறையில் தங்களை இணைத்துக் கொள்ள முன்வரவேண்டும் என்றுமீண்டும் அழைக்கின்றேன் என்றார்.

## வரதராஜப் ...

(1ஆம் பக்க தொடர்ச்சி

கொண்டனர்.

ஆளுநர் நளின் சேனவிரத்தின நியமனப்பத்திரத்தை முதலமைச்சரிடம் வழங்கினார்.

சத்தியப்பிரமாண வைபவத்தை அடுத்து திரு வரதராஜப் பெருமாள் பிரதமர் திரு ஆர் பிரேமதாசாவை நாடாளுமன்றத்தில் உள்ள பிரதமரின் அலுவலக அறையில் சந்தித்துப் பேசினார்;

மாகாண அமைச்சர்கள் பதவிப்பிரமாணமும் மாகாண சபையின் முதல் கூட்டமும் இன்று திருகோணமலை நகர மண்டபத்தில் நடைபெறும். (உ-எ)

## ஏழு பிள்ளைகளுடன்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

42 வயதான பெண்மணி ஒருவரே தமது பிள்ளைகளுடன் தற்கொலை செய்து கொண்டவர் ஆவார்.

அவரது கணவன் சிலமாதங்களின் முன் தற்கொலை செய்துகொண்டார், இரு பெண்பிள்ளைகளை கணவன் உயிருடன் இருக்கும் போதே திருமணம் செய்து கொடுத்து விட்டனர் அப்போது அவர்கள் வசதியாக இருந்ததனால் இருவருக்கும் சீதனம் ஏராளவு கொடுத்தனராம்.

எனினும் சீதனம் போதாது மேலும் தரவேண்டும் என்று மருமக்கள் கொடுத்த தொல்லை பொறுக்கமுடியாமல்தான் 42 வயது பெண்மணியின் கணவரான மாமனார் தற்கொலை செய்துகொண்டாராம்.

தொடர்ந்தும் சீதனத் தொல்லைகள் இருந்து வந்ததைப் பொறுக்காமல் மனமுடைந்த நிலையில் பெண்மணி 7 பிள்ளைகளுடன் கிணற்றில் விழுந்தாராம். (அ- 164)

## சில பகுதிகளுக்கு மட்டும் இரவு நேரத்தில் மின்சாரம்

### வழங்குவதற்கு ஆரம்ப முயற்சிகள்

யாழ்ப்பாணம், டிச 10

யாழ்- மாவட்டத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு இரவு நேரங்களில் மாத்திரம் மின்சாரத்தை வழங்குவதற்கான ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன

பாதுகாப்பு கருதியும், யாழ் நகரில் கொள்ளையர் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் விதமாகவும் இரவு நேரங்களில் குறிப்பிட்ட சில இடங்களுக்கு மாத்திரம் மின்சாரம் வழங்குவது பற்றி ஆராயப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இதன்பொருட்டு காங்கேசன்துறையிலுள்ள லங்கா சிமெந்து லிமிட்டெட்டின் வாயுவிசையாளிகளை (GAS TURBINES) மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்துவது பற்றி ஆராயப்பட்டிருக்கிறது

ஒரு வாயு விசையாளி மூலம் எட்டு மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். தற்போது ஒரு விசையாளியை மாத்திரமே இயக்க முடியும்

யாழ்-மாவட்டம் முழுவதிற்கும் இரவு நேரங்களில் மின்சாரம் வழங்குவதானால் மொத்தம் 28 மெகாவோட் மின்சாரம் தேவை

அதனால் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மாத்திரம் தற்போது மின்சாரத்தை விநியோகிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது

இந்த வாயுவிசையாளியை நாளொன்றுக்கு இயக்குவதற்கு 30 தொன் டீசல் தேவைப்படும்.

ஒரு யூனிட் மின்சாரத்தை இந்த விசையாளி மூலம் உற்பத்தி செய்வதற்கு மூன்று ரூபா நாற்பத்தி இரண்டு சதம் செலவாகும் என்று தெரிவிக்கப்படுகிறது (உ-ஜ-5)

## சிங்கள மக்களுக்கு புலிகள் விடுத்த அறிக்கை

வவுனியா, டிச 10

சிங்கள மக்களுக்கு என தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் இம்மாத ஆரம்பத்தில் வவுனியாவில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அன்பார்ந்த ஸ்ரீலங்கா (சிங்கள) மக்களே!

ஒடுக்குமுறை, சுதந்திரம் என்றால் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொள்ள ஆரம்பிக்கின்றீர்கள். எந்த எந்தச் சட்டங்களும் இராணுவமும் தமிழ் மக்களை ஒடுக்கவும் இனப்படுகொலை புரியவும் பயன்படுத்தப்பட்டனவோ அவையே இன்று உங்கள் மீது திருப்பி விடப்பட்டிருக்கின்றன.

முதலாளித்துவம் தனது சுயநலனுக்காக தனது இன மக்களை கொலை செய்யத் தயங்காது. இதற்காக எதிரியையும் நண்பனாக்கிக் கொள்ளும்.

இன்று தெற்கில் சிங்கள அரசால் நடத்தப்படும் கொலைகளும் ஸ்ரீலங்கா ஒப்பந்தமும் இதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன. நீங்கள் எமது போராட்டத்தின் நியாயங்களைப் புரிந்து கொண்டு விரைவில் அதனை அங்கீகரிக்கும் காலம் வரவேண்டும்.

உங்கள் இறைமையை மீட்க நீங்கள் நடத்தும் போராட்டத்திற்கு எமதுபூரணஒத்துழைப்பு எப்போதும் உண்டு.

-இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-164)

## ரஷ்ய.....

(1 ம்பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்டனர்.

இந்த நூற்றுண்டிலேயே மிக மோசமான பூமியதிர்ச்சி இது என்று உலக புவியியல் ஆராய்ச்சியாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆர்மேனியா மாநிலத்தில் உள்ள அணுமின் நிலையம், இரசாயன தொழிற்சாலைகள் அதிஷ்ட வசமாக இந்த பூமியதிர்ச்சியினல் பாதிக்கப் படவில்லை என்று சோவியத் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பூமியதிர்ச்சி காரணமாக விடுகளை இழந்தோரின் எண்ணிக்கை சுமார் 4 லட்சம் என சோவியத் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

50 ஆயிரம் மக்கள் வசித்த கிராமம் ஒன்று பூமியினுல் விழுங்கப்பட்டு விட்டது. (உ-ரொ)

## 250 பேர் கைது!

மெதிரிகிரியவில் பாதுகாப்புப் படையினர் நேற்று நடத்திய சுற்றிவளைப்பு தேடுதலின்போது சந்தேகத்தின் பேரில் 250 பேர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நேற்று முன் தினம் காலை மெதிரிகிரியாவில் பொலிஸ் நிலையத்தின் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

அதைத் தொடர்ந்தே இந்த சுற்றிவளைப்பும் தேடுதலும் நடத்தப்பட்டது. (உ-எ)

## ஸ்ரான்லி வீதிக் கிளையில் இன்றும் நாளையும் நிவாரணம்

யாழ்ப்பாணம், டிச 10

ஆயிரத்து 867 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணமான ஆயிரம் ரூபா கொடுப்பனவை இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளை இன்றும் நாளையும் வழங்கும்.

இவ்வங்கியில் இன்று நிவாரணப் பணத்தைப் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையும், அவர்கள் வதியும் கிராம சேவகர் பிரிவுகளும் வருமாறு:-

★ கொழும்புத்துறை - 109
★ ஈச்சமோட்டை - 14
★ குருநகர் - 03
★ கொட்டடி - 441
★ நாவாந்துறை - 292

நாளை பின்வரும் பகுதிகளில் வதியும் குடும்பங்களுக்கு நிவாரணப் பணம் வழங்கப்படும்:-

★ பெரியகடைப் பகுதி - 874
★ முஸ்லிம் தெரு - 144

(உ 10)

## அவர் கேட்ட....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன் ஆரம்பமானது.

ஊழியர்கள் கடந்த புதன்கிழமை திடீரென வேலைநிறுத்தம் செய்ததன் காரணமாக பல நோயாளர்கள் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி விட்டனர். சிலர் திரும்பி வந்து விட்டனர். எத்தனைபேர் திரும்பவில்லை என்பதைக் கண்டுபிடிக்கும் கணக்கெடுப்பே நேற்று முன்தினம் ஆரம்பமானது. (ஒ-எ)

## சட்டத் திருத்தம்.....

(1 ஆம் பக்கதொடர்ச்சி)

படையில் மாற்றம் ஏதும் இல்லை. உயர் கல்வி பெறுவதற்காக சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் உபயோகிக்கப்படலாம்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக தமிழ் இருக்கும் ஏனைய பிரதேசங்களின் நிர்வாக மொழியாக சிங்களம் இருக்கும்.

எப்படியாயினும், உதாரணமாக- கிழக்கில் சேருவில அல்லது அம்பாறை, வடக்கில் வவுனியா ஆகிய இடங்களில் -சிங்களவர் பெரும்பான்மையாக இருக்கும் பிரதேச உதவி அரசாங்க அதிபர் பகுதிகளில்- சிங்கள மொழி நிர்வாக மொழியாக இருக்கும் என்று ஜனதிபதி உத்தரவிட முடியும்

அதேவிதி சிங்களப் பிரதேசங்களில் தமிழர் பெரும்பான்மையாக இருக்கும் பகுதிகளில் அமுல் நடத்தப்படும்; அங்கு தமிழ் நிர்வாக மொழியாக அமையும்.

தமிழரும் சிங்களவரும் சமமாக வாழும் பிரதேச உதவி அரச அதிபர் பகுதிகளில் சிங்களமும் தமிழும் நிர்வாக மொழிகளாக இருக்கும்

எந்த மாகாணத்தில் வசிப்பவராக இருப்பினும் அரசுடன் சிங்களம் அல்லது தமிழில் எவரும் தொடர்பு கொள்ள முடியும்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையைச் சேர்ந்த அதிகாரிகள், சிங்களம் நிர்வாக மொழியாக உள்ள பகுதிகளில் உள்ள அரசு அதிகாரிகளுடன் இணைப்பு மொழியான ஆங்கிலத்தில் தொடர்பு வைத்துக் கொள்ளலாம்.

நிர்வாக மொழியில் தஸ்தாவேஜுகள் (Records) வைத்துக் கொள்ளப்படவேண்டும். எந்தப் பிரஜையும் தஸ்தாவேஜுகளின் பிரதியை தஸ்தாவேஜு உள்ள மொழியில் அல்லது தான் பாவிக்கும் மொழியில் பெற்றுக் கொள்ளமுடியும்

திஸ்ஸமஹாரகமவில் உள்ள ஒரு விவசாயி அம்பாந்தோட்டை அரசு அதிபருடன் சிங்களத்தில் தொடர்பு வைத்தால், அங்கு தமிழில் தஸ்தாவேஜு தயாரித்து பராமரிக்க வேண்டிய தேவை இல்லை,

அதுபோல நாவற்குழியில் உள்ள ஒருவிவசாயி யாழ் அரச அதிபருடன் தமிழில் தொடர்புவைத்தால், அங்கு சிங்களத்தில் தஸ்தாவேஜுகளை வைத்துக்கொள்ள வேண்டியதில்லை.

நீதிமன்றம் இயங்கும் இடத்தில் உள்ள மொழியே நீதிமன்ற மொழியாக இருக்கும்.

அம்பாறையில் நீதிமன்றம் இயங்கினல், அது சம்பந்தமான விசாரணை நடைமுறைகள் சிங்களத்தில் இருக்கும்.

தற்போதுள்ள சட்டங்களுக்கும், புதிய விதிகளுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டால் புதிய விதிகளே செல்லுபடியாகும். இப்படிசட்டமா அதிபர் தெரிவித்தார். (உ-எ)

## மூன்றும் தவணை நீடிப்பு வடபகுதிக்கு பொருந்தாது!

யாழ்ப்பாணம், டிச. 10

1988 ஆம் வருடத்துக்கான மூன்றும் தவணைக்காலம் அடுத்தவருடம் மார்ச் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு விடுத்த அறிவித்தல், வகுப்பேற்றப் பரீட்சைகள் நடைபெற்ற வடபகுதிப் பாடசாலைகளுக்குப் பொருந்தாது

யாழ் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேல் சபாநாயகம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பிலும் அடுத்துள்ள மாவட்டங்களிலும் உள்ள பாடசாலைகள் பகிஷ்கரிப்பு, ஆர்ப்பாட்டம் முதலான சம்பவங்களால் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டன

இதனல் அங்கு மூன்றும் தவணைப் பாடங்கள் முறையாகப் போதிக்கப்படவில்லை. வகுப்பேற்றப் பரீட்சைகளும் நடைபெறவில்லை.

ஆனல் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பாடங்கள் சரிவர நடத்தப்பட்டதுடன் வகுப்பேற்றப் பரீட்சைகளும் நடந்து முடிந்துள்ளன.

எனவே 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தப் பகுதிகளில் பாடசாலைகள் ஆரம்பமாகும் போது 89 ஆம் ஆண்டிற்கான முதலாம் தவணையே ஆரம்பமாகும்

அடுத்த ஆண்டிற்கான இலவசப் பாட நூல்களும் இப்பகுதி மாணவர்களுக்கு ஏற்கனவே விநியோகிக்கப் பட்டுள்ளன.

-இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

## முஸ்லிம்....

(1ம் பக்கத்தொடர்ச்சி)

தெரிவுகளில் ஒன்றை தலைவர் அஷ்ரப் மாநாட்டில் அறிவிப்பார் என்று காங்கிரஸ் தலைவர் சேகு இஸ்ஸடீன் சொன்னர்.

22 மாவட்டங்களில் இருந்து சுமார் 10 ஆயிரம் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொள்வர் என்றும் அவர் மேலும் சொன்னர்.

இதேவேளை எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களின் முதலாவது பட்டியலும் மாநாட்டில் வெளியிடப்படும்

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனப். எம். எச். எம். அஷ்ரப் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-எ)

## சுன்னகத்தில் நிவாரணம்

ஏழாலை, சுன்னாம், கந்தரோடை ஆகியபகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்து 91 குடும்பங்களுக்குரிய மீளக்குடியமர்தல் நிவாரணப் பணமான ஆயிரம் ரூபா, மக்கள் வங்கியின் சுன்னகம் கிளையினல் இன்று வழங்கப்படும்

முன்னர் தமது பகுதிகளில் நிவாரணம் வழங்கப்பட்ட சமயம் அவற்றைப் பெறத் தவறியோர் இன்று அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது (உ)

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ். நல்லூர் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பிறவுண் வீதியிலுள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது (ஒ)

## மரண அறிவித்தல்கள்

### இ.சோமசுந்தரம்பிள்ளை (நெடுந்தீவு)

(ஈசங்காடு — சுந்தரம்பிள்ளை)

திரு. இ.சோமசுந்தரம்பிள்ளை காலமானர். இவர் காலஞ்சென்ற திருமதி சோமசுந்தரம்பிள்ளையின் அன்புக்கணவரும் குணரத்தினம் (தேசிய கடுதாசிக் கூட்டுத்தாபனம், கொழும்பு), கணபதிப்பிள்ளை (இ பரிசோதகர், கோண்டாவில்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கனகம்மா (கிருஷ்ணப் பகுதி, யாழ்ப்பாணம்), சரோஜா (ஆசிரியை மகா வித்தியாலயம் நெடுந்தீவு ஆகியோரின் மாமனரும் ஆவர் ஈமக்கிரியைகள் 10-12-88 அவரது இல்லத்தில் பி. ப. 3 மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்

ஈசங்காடு,
நெடுந்தீவு கிழக்கு.

தகவல்!
- பிள்ளைகள்.

(8255)

### சின்னத்தம்பி பராபரன்

(பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீட இரண்டாம் வருட மாணவன்)

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், திரு. ஏ. சின்னத்தம்பி தம்பதிகளின் புதல்வரும், பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட இரண்டாவது வருட மாணவருமான சி பராபரன் நேற்று அகால மரணமானர். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். ஈமச்சடங்குகள் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

தகவல்!
சி. அன்பரசன்.

(8096)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டாருக்காக யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 10 - 12 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna. on Saturday 10th December 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org